# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI
Case No. CC 75/2016

Prosecution Witness 1

| | | | |
|---|---|---|---|
| Name | : மதனகோபால் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.ராமகிருஷ்ணன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of December 2024.

(Accused 2 present. Accused 1, 3, 4, 5 absent. Petition u/s. 317 Crpc filed and allowed)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது கோவையில் குடியிருக்கிறேன். நான் பிளைவுட் தொழில் செய்து வருகிறேன். 1 வது எதிரி எனது சகோதரர் ஆவார். 2 ம் எதிரி கணேசன் எனது மைத்துனர் ஆவார். 3 வது எதிரி எனது தங்கை ஆவார். 4 ம் எதிரி தாயாரின் சகோதரி ஆவார். 5 ம் எதிரியாக கூறப்பட்ட ஆனந்தலட்சுமி 4 ம் எதிரியின் மகள் ஆவார். எனது தாயாரின் தகப்பனார் லட்சுமண கௌடர் பொள்ளாச்சியில் வசித்து வந்தார். அவருக்கு இரண்டு மகள்கள் ஒன்று எனது தாயார் ராஜேஸ்வரி மற்றும் 4 ம் எதிரி இளைய மகள் ஆவார். என்னுடைய தாத்தாவிற்கு ஆண் மக்கள் கிடையாது.

2. எனது தாத்தாவின் தகப்பனார் வழி உயில்படி எனது தாத்தாவிற்கும் எனது தாத்தாவின் சகோதரர்கள் தேவராஜ் மற்றும் சண்முகம் ஆகியோருக்கிடையில் பாகப்பிரிவினை செய்து 30.11.1994 ம் தேதி உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் மேற்படியார்கள் சொத்த சம்மந்தமாக அவர்களுக்குள் சமாதான ஒப்பந்தத்தின்படி பொள்ளாச்சியில் உள்ள கா.சா .எண்.747/2, 748/2, 2296 ஆகிய காலைகள் உட்பட மொத்தம் 9.33 ஏக்கர் நிலம் உட்பட மற்றும் பல நிலங்கள் உட்பட 10.87 ஏக்கர் எனது தாத்தா லட்சுமண கௌடருக்கு பாகமாக வந்தது.

3. என் தாத்தா லட்சுமணகௌடர் 1991 ம் ஆண்டு முதல் கோவையிலும் பொள்ளாச்சியிலும் என்னுடன்தான் வசித்து வந்தார். அவரை நான் பராமரித்து வந்தேன். 27.01.2004 அன்று என்னுடைய தாத்தா எனக்கு தான செட்டில்மென்ட்

பத்திரம் ஒன்றை கா.சா .எண்.747/2, 748/2, 2296 ஆகிய காலைகள் உட்பட மொத்தம் 9.33 ஏக்கர் நிலத்தை பொறுத்து எனக்கு எழுதிக்கொடுத்தார். 243905 எண் கொண்ட பட்டா பாஸ் புக் வரிசை எண்.1403 எண் கொண்ட பட்டா எண் பாஸ் புக்கையும் என் வசம் சார் பதிவாளர் கையொப்பமிட்டு என் பெயரில் பதிவானதாக என் வசம் ஒப்படைத்தார்.

4. அதன்பின் மேற்படி நிலத்தை பொறுத்து தாசில்தார் அலுவலகம் சென்று விண்ணப்பித்து பெயர் மாற்றம் மற்றும் சப் டிவிஷன் செய்து விவசாயம் செய்து வந்தேன். இந்நிலையில் 10.08,2007 ம் அன்று என் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஆட்களை வெளியேறும்படி எனது அண்ணன் சுரரேசனும் என்து மைத்துனர் கணேசனும் வேலையாட்களிடம் கூறினார்கள்.

5. இது சம்மந்தமாக பொள்ளாச்சி நகர கிழககு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதற்கு போலீசார் மனு ஏற்பு ரசீது கொடுத்தார்கள். அதன்பின் போலீசார் விசாரணை செய்யும்போது எனது தாத்தா 04.04.2008 அன்று 27.01.2007 ல் என் பெயரில் பதிவு செய்த தான செட்டில்மென்ட் ஆவணத்தை ரத்து செய்ததாக என்னிடம் போலீசார் தெரிவித்தார்கள்.

6. இது சம்மந்தமாக பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அப்பொழுதே ஒரு வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கில் மேற்படி தான செட்டில்மென்ட் ரத்து செய்தது என்னை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை பரிகாரம் கோரி சிவில் வழககு தாக்கல் செய்தேன. பின்னர் மாவட்ட பத்திர பதிவு தகவல் அலுவலகத்தில் நான் ஒரு மனு செய்தேன். அதன் தேதில் 01.08.2008 ஆகும். அதற்கு மாவட்ட தகவல் அலுவலர் அவர்கள் 13.08.2008 அன்று எனக்கு ஒரு குறிப்பாணை கொடுத்தார்கள். அதில் எனது தாத்தா 2005 ம் வருடம் என் பெயரில் இருந்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்வதற்கு மனுதாக்கல் செய்ததாகவும் அது 04.04.2008 அன்று பதிவு செய்ததாகவும், மேற்படி 3 வருட காலத்தில் விவசாய நிலம் என்பதாலும் பட்டா பாஸ் புத்தகம் இல்லாததால் பதிவு தாமதமாக 2008 ம் வருடம் செய்ததாக எனக்கு தகவல் கூறினார்கள். மேற்படி தகவல் குறிப்பாணையை மற்றும் ஒரு பட்டா பாஸ் புத்தக எண்.229116 என்பதன் நகலையும் எனக்கு வழங்கினார்கள்.

7. 2007 ம் வருடமே மேற்படி கா.சா .எண்.747/2, 748/2, 2296 ஆகிய காலைகள் உள்ள சொத்துக்களை கோவை கிளை ஐடிபிஐ வங்கி மற்றும் பாங்க் ஆப் இந்தியா, ஆர். எஸ்.புரம் கிளை ஆகியவற்றில் அடமானம் வைத்து கடன் பெற்றிருந்தேன்.

இந்நிலையில் மேற்படி பத்திரத்தின் அசல் மற்றும் பட்டா பாஸ் புத்தகத்தின் அசல் ஆகியவை மேற்படி வங்கிகளின் வசம் இருந்த நிலையில் சந்தேகம் ஏற்பட்டு பொள்ளாச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி தானசெட்டில்மென்ட் ரத்து ஆவணம் எவ்வாறு பதிவு செய்யப்பட்டது என்று தகவல் கேட்டிருந்தேன். அதில் எனது தாத்தா 2005 ம் வருடம் என் பெயரில் இருந்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்வதற்கு மனுதாக்கல் செய்ததாகவும் அது 04.04.2008 அன்று பதிவு செய்ததாகவும், மேற்படி 3 வருட காலத்தில் விவசாய நிலம் என்பதாலும் பட்டா பாஸ் புத்தகம் இல்லாததால் பதிவு தாமதமாக 2008 ம் வருடம் செய்ததாக எனக்கு தகவல் கூறினார்கள். மேற்படி தகவலை வைத்து கோவை ஆட்சியரிடம் புகார் கொடுத்தேன். அதன் அடிப்படையில் கோவை ஆட்சியர் விசாரித்து பின்பு கோவை மாவட்ட வருவாய் அலுவலர் எனக்கு குறிப்பாணை கொடுத்தார். அந்த குறிப்பாணையில் 243905 என்ற பட்டா பாஸ் புத்தகம்தான் அசல் என்றும், 229116 பட்டா பாஸ் புத்தகம் போலியானது என்றும் மாவட்ட பதிவேடுகளில் இல்லை என்றும் 243905 என்ற பட்டா பாஸ் புத்தகத்தில் மாவட்ட வட்டாட்சியர் கையொப்பமிட்டுள்ளதாகவும், 229116 பட்டா பாஸ் புத்தகத்தில் துணை வட்டாட்சியர் மணிவண்ணன் என்பவர் கையொப்பமிட்டிருந்ததாகவும் மேற்படி பாஸ் புத்தகம் அரசு பதிவேடுகளில் இல்லை என்றும் அது போலியானது என்றும் எனக்கும் கோவை மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கும் குறிப்பாணை கொடுத்தார்.

8. அதன்பின் சென்னை உயர் நீதிமன்றத்தில் இது சம்மந்தமாக நான் வழக்கு தொடுத்து உரிய குற்றவியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு உத்தரவிட்டது. அதன்பின் மீண்டும் இந்நீதிமன்றத்தில் 2011 ம் வருடம் நான் புகார் கொடுத்து போலீசார் எதிரிகள் மீது 2012 ம் வருடம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள்.

9. இதற்கிடையில் 1 மற்றும் 4 ம் எதிரிகள் என் நிலத்தில் 2011 ம் வருடம் மேற்படி நிலம் தங்களுக்கு சொந்தமானது என்று எழுதி ஒரு பலகையை வைத்தார்கள். மேற்படி சங்கதியின் மீது நான் பொள்ளாச்சி நகர கிழக்கு காவல் நிலையத்தில் மீண்டும் ஒரு புகார் கொடுத்தேன். போலீசார் மனு ஏற்பு ரசீது தந்தார்கள். 1 மற்றும் 4 ம் எதிரிகள் போலீசாரிடம் ஏற்கனவே தாங்கள் கோவை மாவட்ட நீதிமன்றத்தில் என் தாத்தா மீது அசல் வழக்கு எண்.755/2008 என்ற வழக்கு தொடுத்து அதன் பெயரில் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின் நகலை ஒப்படைத்தனர்.

10. மேற்படி வழக்கில் 1 மற்றும் 4ம் எதிரிகள் 229116 பட்டா பாஸ் புத்தகத்தை தாக்கல் செய்து தீர்ப்பை பெற்றுள்ளார்கள். அதே பட்டா பாஸ் புத்தகத்தை பொள்ளாச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் 22.09.2009 அன்று பதிவு செய்துள்ளார்கள். பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் என் தாத்தா எனக்கு கொடுத்த தான செட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்தது செல்லாது என்று நான் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.436/2008 என்ற வழக்கு எனக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி தான செட்டில்மென்ட் ரத்து செய்தது செல்லாது என்று விளம்புகை பரிகாரம் பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.

11. மேற்படி நிலத்தை பொறுத்து நான் வைத்துள்ள 243905 என்ற பட்டா பாஸ் புத்தகம்தான் அசல் என்றும், 229116 பட்டா பாஸ் புத்தகம் போலியாக தயாரிக்கப்பட்டு எதிரிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதாலும் எதிரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். இந்நீதிமன்றத்தில் நான் கு.வி.மு.ச. பிரிவு 156(3)-ன் கீழ் தாக்கல் செய்த புகார் மனு **அசாஆ 1** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை எதிர்தரப்பு வழக்கறிஞரின்வேண்டுகோளுக்கு இணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது):

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

S/d M.A. Suvedharanyan
Judicial Magistrate No.I,
Pollachi.